Reg. M. 2330.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.


| மலர் ௧௨ | பிரமாதி ஆண்டு மார்கழித் திங்கள் 1939௵ டிசம்பர்௴ | இதழ் ௧௨ |
|---|---|---|


## ஞாலம் வணங்கும் ஞானச் செல்வர்

[ம. பாலசுப்பிரமணிய முதலியார்]

ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் திருக்கோவலூர் ஆதீனத் தலைமையேற்ற ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழா மிகச் சிறப்பாகத் திருப்பாதிரிப்புலியூரில் - திருமடத்தில் 1939௵ நவம்பர்௴ 18, 19-ம் தேதிகளில் கொண்டாடப் பெற்றது.

முதல்நாட் காலையில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் தங்கள் ஆன்மார்த்த பூசையை முடித்துக்கொண்டு, குருதரிசன சமாதி வழிபாடு செய்து, பிறகு மடாலயத்திலுள்ள ஸ்ரீ கலியாண சுப்பிரமணிய சுவாமிகட்கு அபிடேக அலங்கார தீபாராதனை முதலியவற்றை நடத்தினார்கள். இதன் பிறகு மானுடச் சட்டை தாங்கி மானைக்காட்டி மானைப் பிடிக்கவந்த சாக்ஷாத் சிவகுருநாதனாகவே சுவாமிகளைப் பாவித்து மடத்துச் சீடர்

களுள், திரு. உருத்திரசாமி ஐயரவர்களும் பிறரும் பூசித்து வழிபட்டார்கள். பிறகு மடத்து மாணவர்கள் "சீதக் களப" எனத் தொடங்கும் விநாயக அகவலைப் பாராயணம் செய்தார்கள். பின்னர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் தமிழின் பின் செல்வது முருகன் திருவிளையாடல் என்பதை அழகாக விளக்கி மேற்கூறிய மாணவர்களைத் திருமுருகாற்றுப்படை பாராயணம் செய்யும்படி கட்டளையிட்டார்கள். மாணவர்கள் இதைப் பாராயணம் செய்தது யாவராலும் என்றென்றும் மறக்கற்பாலதன்று. கேட்கும் மக்கள் யாவரும் எளிதிற் பொருளையறிந்து முருகன் நினைவில் அழுந்தி மனமுருகி நிற்கும் முறையில் இப்பாராயணம் அமைந்திருந்தது.

பிற்பகலில் திருவாளர் டி. கே. சிதம்பரநாத முதலியாரவர்கள் தலைமையில் பொன்விழாக் கூட்டம் தொடங்கிற்று. பொன்விழாக் குழுவின் தலைவரும் தென்னார்க்காடு ஜில்லா போர்டு தலைவருமாகிய திரு. கே. சீதாராம ரெட்டியாரவர்கள் சுவாமிகளுடைய குணாதிசயங்களைப் பாராட்டித் திரு. சிதம்பரநாத முதலியாரவர்களைத் தலைமை வகிக்கும்படி விண்ணப்பித்து முன்மொழிந்தார்கள். திரு. டி. ஆர். சக்ரபாணி ஐயங்காரவர்களும் திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்களும் பின்மொழிந்தும் வழிமொழிந்தும் சுவாமிகள் பெருமையையும் தலைவர் தகுதியையும் விளக்கினார்கள். பிறகு தலைவரவர்கள் மிக விரிவாகத் தாம் திருநெல்வேலி ஜில்லாவில் முதன்முதலாகச் சுவாமிகளுடைய சொற்பொழிவைக் கேட்ட வரலாறு, சுவாமிகளுடைய நாவன்மை, கல்வித்திறன், ஒழுக்கம் முதலியவற்றைக் கவர்ச்சிமிக்க நடையில் எடுத்துரைத்தார்கள். பிறகு திரு. பு. வே. தேவராஜ முதலியாரவர்கள் பொன்விழாவைப் பாராட்டி ஸர். பி. டி. ராஜன், இராமசாமிப் பெரியார், திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, திவான்பகதூர் - டி. எம். நாராயணசாமி

பிள்ளை, யாழ்ப்பாணம் எஸ். நடேசபிள்ளை முதலிய பல பிரமுகர்களனுப்பிய தந்திச் செய்திகளைப் படித்தார்கள். பின்னர் திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்கள் வாழ்த்துப் பாக்கள் அனுப்பிய சங்கங்கள் அறிஞர்கள் வணக்கக் கடிதங்களனுப்பிய அன்பர்கள் பெயர்களைத் தெரிவித்து அவற்றுள் சிலவற்றின் முக்கிய பகுதிகளைப் படித்தார்கள். பிறகு ஓரிளைஞன் ஒரு வாழ்த்துப்பத்திரம் படித்தனன்.

பிறகு நமது சமாஜத்தின் நல்வணக்கப் பத்திரம்* சமாஜக் காரியதரிசியால் வாசித்துச் சமர்ப்பிக்கப்பட்டது. பிறகு தமிழ்நாட்டிலுள்ள பல சபைகள் வணக்கப் பத்திரங்கள் வாசித்தளித்தன. அவற்றுள் காந்தைத் தமிழ்ச் சங்கம், இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபை, காஞ்சிபுரம் ஸ்ரீமெய்கண்டார் கழகம், வாலாஜாபாத் இந்துமத பாடசாலை, திரிசிரபுரம் சைவ சித்தாந்த சபை, தில்லைத் தமிழ்க்கழகம், காஞ்சிபுரம் ஸ்ரீ ஞானியார் சங்கம் முதலியன குறிப்பிடத் தக்கன. பிறகு பல தமிழறிஞர்கள் தாங்களியற்றிய பாடல்களை வாசித்தளித்தனர். தலைவரவர்கள் கருத்துரையின் பிறகு ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் ஆசிமொழி கூறி விழாவின் ஞாபகார்த்தமாகப் பல நன்கொடைகள் நல்கினார்கள். திருவிடைமருதூர் தேவார பாடசாலை ஆசிரியரும் சுவாமிகளுடைய சீடரும் சென்னைப் பல்கலைக்கழகத்து வித்துவான் பட்டம் பெற்றவருமாகிய உயர்திரு. மு. நடராஜதேசிக மூர்த்தியவர்கள் இடையிடையே பொருத்தமான திருமுறைப் பாக்களை நையாத மனத்தினையும் நைவிக்கும் முறையில் ஓதினார்கள். திருக்கோவலூராதீனத்தைச் சேர்ந்து ஞானோபாய சாதனை பெற்று சிவலிங்கைக்கியமாயின அவிநாசிநாத சுவாமிகள்

* இதனை மற்றோரிடத்திற் காண்க.

அருளிச்செய்த நெஞ்சுவிடுதூது, சிகாமணிப்பதிகம், அபி டேகமாலை, அட்டகம், மங்களம் என்ற ஐந்துமடங்கிய தோத்திரக்கொத்து குறிப்புரையோடு ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் மடாலய வெளியீடாக அன்பர்கட்கு இலவசமாக வழங்கப்பட்டது.

இராவ்பகதூர் இராஜாபாதர் முதலியாரின் செல்வப் புதல்வியாரும், டிப்டி இன்ஸ்பெக்டர் ஆப் லோகல் போர்ட்ஸ் ஆகப் பணிபுரியும் திரு. கே. அரங்கசாமி முதலியாரின் வாழ்க்கைத் துணைவியாரும், ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளுடைய மாணாக்கியாரும், இவ்வாண்டில் வான் பொய்த்துக் கதிர வன் வறுத்திட்ட கோடைக் காலத்தில் சுவாமிகளுடைய தவவுடம்பு இரணசிகிச்சையிற் கிடந்து வருந்தியபோது பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து அல்லும் பக லும் அநவரதமும் கண்ணிமையாது காத்துக் காலனைக் காத வெல்லைக்குள் கால்வைக்கவும் இயலாதபடி தடுத்து வெற்றிகொண்ட மாதரசியுமாகிய திருநிறைசெல்வியர் க. ர. ஆதிலக்ஷ்மி அம்மையாரவர்கள் தாம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிக ளிடம் கந்தரநுபூதியைப் பாடமாகக் கேட்டதைக் குறிப் பெடுத்துவைத்து ஒழுங்குபடுத்தி இப் பொன்விழாவின் நினைவுக்குறியாக வெளியிட்ட அழகிய நூல் சுவாமிகளுடைய திருவடிகளில் சமர்ப்பிக்கப்பெற்று அன்பர்கட்கு இலவச மாக விநியோகிக்கப்பெற்றது. பிறகு சுவாமிகள் ஸ்ரீ பாட லேசுவரர் ஆலயத்துக்குத் தொண்டர்குழாம் புடைசூழச் சென்று வழிபட்டார்கள். இவ் வழிபாட்டின் இறுதியில் பொன் விழாவின் முதல்நாள் நிகழ்ச்சிகள் முற்றுப்பெற்றன.

இரண்டாம்நாட் காலை திரு. தெ. பொ. மீனாட்சிசுந்த ரம் பிள்ளையவர்கள் தலைமையிலும், பொன் விழாத் தலைவ ரவர்கள் முன்னிலையிலும் பல புலவர்களும், சுவாமிகளுடைய மாணாக்கர்களும், மாணாக்கியரும் வணக்கப் பாடல்களைச்

சமர்ப்பித்தனர். பின்னர் பண்டிதமணி - திரு. மு. கதி
ரேசச் செட்டியாரவர்கள் தலைமையில் சேலம் காலேஜ்
தமிழ் விரிவுரையாளர் - திருவாளர் ஆந்திரக்காசியப திம்
மப்ப அந்தணனாரவர்களியற்றிய ஆசாற்றுப்படை ஆக்கி
யோரால் அரங்கேற்றப்பட்டது. தலைவர், பாட்டுடைத்
தலைவர் நற்பண்புகளை விதந்தோதி அரங்கேறிய பாடலைப்
பற்றிய சில கருத்துக்களைக் காய்தலுவத்தலின்றி தெரி
வித்தார்கள். பிற்பகலில் திருவாளர்கள் ந. மு. வேங்
கடசாமி நாட்டாரவர்கள், ச. சச்சிதாநந்தம் பிள்ளை
யவர்கள் ஆகிய பேரறிஞர்கள் மடங்களின் வரலாறு,
தொண்டு, ஞானியார் மடத்தின் வரலாறு, ஸ்ரீலஸ்ரீ சுவாமி
களின் கல்வியறிவொழுக்கம் முதலியனபற்றி விரிவுரைகள்
நிகழ்த்தினார்கள். தலைவர் முடிபுரையின் பின்னர் காரிய
தரிசியின் நன்றி கூறலும் சுவாமிகள் ஆசீர்வாத வுரையும்
நிகழ்ந்தன. நமது சமாஜத்துக்கு நன்கொடையாக ஒரு
மாதத்திய சித்தாந்தப் பத்திரிகையின் செலவைத் தருவ
தாக சுவாமிகள் தெரிவித்தார்கள். கடவுள் வாழ்த்தொலி
முழங்க விழா இனிது நிறைவேறிற்று.

இப்பொன் விழாவுக்குச் சில நாட்கள் முன்பு மிகுதி
யான மழை பெய்தமையால் ரயில் வழியிற் பல விடங்களில்
உடைப்பெடுத்துப் பல அன்பர்கள் திருப்பாதிரிப்புலியூருக்
குச் செல்ல இயலாமற் போயிற்று. தஞ்சை, திரிசிராப்
பள்ளி, யாழ்ப்பாணம் முதலிய பல விடங்களில் இப்பொன்
விழாக் கூட்டங்கள் நடைபெற்றன. சுவாமிகளுடைய புகழ்
குமரிமுனையையும் தாண்டி ஈழநாட்டிலும் பரவியுள்ள
தெனின் சுவாமிகளை எந்நாட்டவர்க்கும் இனிய குரவர்
எனக் கூறுதல் மிகையாகாது.

இப்பொன் விழாவின் சம்பந்தமாக அறிஞர்கள் எழு
திய கட்டுரைகள், பாடல்கள், கடிதங்கள், விழா நிகழ்ச்சிகள்

முதலியன வடங்கிய பொன்விழா மலர் விரைவில் வெளிவருமென்று அறிகிறோம். அதை ஆவலுடன் தமிழ்நாடு எதிர்பார்க்கின்றது. இப்பொன்விழாவேயன்றி, வைரவிழாவும் நூற்றாண்டு விழாவும் நடைபெற வேண்டுமென்றும் சுவாமிகள் நீண்டகாலம் வாழ்ந்து சமயத்தொண்டாற்ற வேண்டுமென்றும் தமிழ்நாடு தவங்கிடக்கின்றது. "சகமீதிருந்தாலும் மரணமுண்டென்பது சதா நிஷ்டர் நினைவதில்லை செப்பினும் வெகு தர்க்கமாம்" என்பது தாயுமானார் திருவாக்கு. தந்தைக்குபதேசித்த கந்தவேள் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளது காயமே கோயிலாகக்கொண்டு தனது மக்களாகிய நம்மெல்லோருக்கும் பல்லாண்டு பல்லாண்டாக உபதேசம் செய்து நம்மனைவரையும் உய்விப்பாராக. சுபம்.

# நல்வணக்கப் பத்திரம்*

[திருக்கோவலூராதீனம்-திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் - ஞானியார் மடாலயத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் பட்டத்திற்குவந்த ஐம்பதாவதாண்டு பொன்விழாவின்போது (Golden Jubilee) சைவ சித்தாந்த மகா சமாஜத்தால் சமர்ப்பிக்கப்பட்டது.]

**வ**ண்டின மிடைந்து தேத்துளி யருந்தி வளரெழிற்
காமர மிசைத்துச், செண்டலை தாவார் பூம்பொழி லுடுத்த
திருமுனைப் பாடிநன் னாட்டில், தண்டிரு வாமூர் வருசிவ
ஞானத் தமிழ்மணங் கமழநன் குதவி, எண்டிசை யோரு
முச்சிமேல் வைத்திங் கேத்துபு வள்ளலெங் கோமான். (க)

*சைவ சித்தாந்த மகா சமாஜப் போஷகரிலொருவராகிய **பண்டித ரத்தினம் - ருகஸ்ரீ புழலை திருநாவுக்கரசு முதலியாரியற்றியது.** (மிராசுதாரர் செம்பியம், பிரம்பூர்).

கனத்தன வாய்மை நன்கறி யாத கயவரை வெள்குறச் செய்த, மனவலி யோடு கரையினி லேற வழங்கிய பெண்ணை நன் னதியின், வனமிகு பழன நாற்புறஞ் சூழ வளர்திருப் பாதிரிப் புலியூர், கனகமெய்ஞ் ஞானி யார்மடத் துரிமை கவினுறப் பெற்றுவீற் றிருக்கும். (உ)

தூயநற் றோன்றாத் துணையெனு மீசர் தோகையம் பிகைமடி தவழும், ஆயபொற் குமரன் மலரடி மறவா அன் பெனும் வலையினிற் சிக்கி, நேயமோ டென்றும் பூசனை யாற்றி நியதியாய் வழிபடும் வான்றோய், தாயகமாக அடியருக் குதவுந் தகைமைசால் சற்குரு வாமால். (ங)

துறவிகட் கெல்லாந் துல்லிய ராகத் துகளறு பத்தியிற் சிறந்த, பெறலரு மினிய தமிழ்க்கடல் கடந்த பெற்றியா லுற்றதோர் தன்மை,நறவமு தாட்டுஞ் சொற்பொழி வாற்று நாவல ரென்றுல கேத்தும், திறமிகு சிவசண் முகமெய்ஞ் ஞான சிவாசா ரியரெனு மடிகள். (ச)

அரும்பெருங் குணங்க ளபாரமா யிருக்க அவையெலா மெடுத்திவ ணுரைக்க, விரும்பிய புலமை சிறிதுமெற் கிலையே விடுத்தன னஃதுணர்ந் தன்றோ, கரும்பினு மினிய சைவசித் தாந்த கவின்சமா சத்தினுக் குரித்தாய்த், தரும்பய னளித்த நன்றியை மறவாத் தன்மையி லொருசிறி துரைப்பாம். (ரு)

ஆண்டுகடோறு நடைபெறுஞ் சமாச அவைக்கள மருவிய தொன்மைப், பூண்டிடும் வேலூர் சென்னையம் பதியில் புகழ்திருப் பாதிரிப் புலியூர், காண்டகு கூட லூர்புதுச் சேரி கவின்றிரு வெண்ணெய்நல் லூரில், மாண்டரு வியற் சேர் தலைமைபெற் றிருந்த மகிமையைச் செப்பவுமெளிதோ.

நவமுறை முற்றும் விமரிசை யாக நவராசம் பெருகிட எடுத்து, நவநவ மாகப் புந்தியிற் படிய நயமொழி பகர்ந்திட வாய்த்த, நுவலருந் தெய்வ சிந்தனை மல்கு நோக்கமே பெரிதுறு மாங்கே, குவவிய மாந்தர் முகமலர்ந் திடவே குருபரன் சைப்படச் செயுமே. (எ)

நாவினுக் கரசர் புகழினி தோங்கு நற்றிருப் பாதிரிப் புலியூர், தாவிய சமாசச் சார்பினிற் சைவர் தனிமகா நாட்டினை மடத்து, மேவிய செலவி னடைபெறச் செய்த மேன்மையை வகுத்திடப் போமோ, தீவிர மாகத் தமிழ்மொழி யெங்குந் திகழ்ந்திடச் செய்யுநன் முனிவர். (அ)

தெய்வநற் றிலக வதியெனு நங்கைத் திருப்பணி நன்கியற் றியதும், மெய்வழிப் பற்றச் சூலைநோய் தீர்த்து வியன்றரு மப்பரை யாண்டும், எய்திய அதிகை வீரட்டானத்து மெழிற்சமா சத்தினில் மேலாய்ச், செய்திறப் பாளர் பதவியை யேற்றுத் திறம்பட வுரைத்தநற் பெரியோய். (௯)

நாடுமிம் மடத்துப் பட்டமீ பெற்ற நான்முதல் விற்றை நாள் வரையில், கூடுமைம் பான்வற் சரமதற் கேற்பக் கூறு பொன் விழாவினை யேத்திக், தேடுநின் கழற்கிங் குயர்தரு வணக்கஞ் செப்பிடற் குரிமைமிக் குடைத்தாய்ப், பீடுறுங் குமர னருளொமுன் னிட்டுப் பெட்புறத் தொழுதிடு வோமே.

ஐவகைப் பொறியைத் தன்வசப் படுத்தி அடக்கியாள்வி டச்செயுந் தன்மை, தைவதக் கிருபை சமயசன் மார்க்கச் சார்புறு முப்பொரு ளுண்மை, கைவரப் படுத்தி நெறிபிற ழாது கனமிகும் வாய்மையைப் புகட்டும், சைவசித் தாந்த மகாசமா சத்தின் தனிமுதல் விருத்தியைக் கோரி.

அளவிடற் கரிய செயற்கருஞ் செயலை யடைவுட னணி பெற வியற்றி, வளமுறச் செய்த நன்றியை மறவா வகை

யினுக் குரியகைம் மாறு, தளர்விலா தென்றும் வணக்க
மென் மேலுஞ் சாத்துவ நிற்கது வாகும், உளமகிழ்ந்
தேற்றே யெமக்கருள் புரிந்திங் குயருசீ டூழிவாழ்ந் திடுமே.

சொற்பா திரிப்புலியூர் தூய மடாலயத்துப்
பொற்பாரும் ஞானியார் பொன்னடிகள்—வெற்பாரும்
கந்தனடி யார்வாழ்க காண்டகுசீ றக்கமணி
எந்தைசீ டூழிவா ழிங்கு.

# கூத்தப்பெருமான் திருவெழுச்சி

[மயிலை கிழார்]

மார்கழி மாதத்தில் நடராஜப் பெருமான் வீதிக் கெழுந்தருளும் விழா எல்லாச் சிவாலயங்களிலும் நடைபெறுவதுண்டு. திருவாதிரையன்று அதிகாலையில் அபிடேகமும் பிறகு தரிசன உத்ஸவமும் நடக்கும். பிரஹ்மோத்ஸவ காலத்திலும் பத்தாந் திருவிழாவன்று காலையில் நடராஜர் உத்ஸவம் நடைபெறும். இதைப் பஞ்சகிருத்ய உத்ஸவம் என்றும் சொல்வதுண்டு. அபிடேக மண்டபத்துக் கெழுந்தருளுதல் சிருஷ்டி, அபிடேகம் ஸ்திதி, சாந்தணிதல் சம்ஹாரம், வெள்ளைச்சாத்துபடி திரோபாவம், மட்டையடி தரிசனம் அநுக்ரஹம் எனப்படுகின்றன. மார்கழித் திருவாதிரையில் சேந்தனார் அவிழ்ந்த மனத்தோடு அவிழ்ந்த துணியிற் கொணர்ந்து நிவேதித்த களியமுதின் ஞாபகார்த்தமாகச் சிவாலயங்களில் களிநிவேதனம் நடக்கும். "திருவாதிரைக்களி ஒருவாயளி" என்ற பழமொழியும் இதை நினைவூட்டுகிறது.

கூத்தப்பெருமான் திருவெழுச்சி மிகுந்த கம்பீரமுடையது. எழுந்தருளும் திருவுருவங்களுள் உயர்ந்து அகன்ற உருவாயமைந்துள்ளது இப்பெருமான் உருவமே. மேலும் இப்பெருமான் ஆண்டுக்கொருமுறை புறப்படுவதால் விசேட உபசாரங்கள் நடக்கும். ஒன்பது நூற்றாண்டுகட்கு முன்னர் இப்பெருமான் உத்ஸவத்துக்காக ஏற்பட்ட சிலாசாசனம் ஒன்று திருவதிகைவீரட்டானத்து முதற்பிரகாரத்திலுள்ளது. அதைப் படித்து இன்புறுவோமாக.

## தென்னிந்திய கல்வெட்டுக்கள்

## தொகுதி 8 - எண் 330 = S. I. I. Vol 8. No. 330

...புணர உரிமையிற் சிறந்த மணமுடிசூடி மீனவர் நிலைகெட வில்லவர் குலைதர ஏனை மன்னவர் எரியலுற் றழிதர திக்கனைத்தும் தன் சக்கர நடாத்தி வீரசிம்மாஸனத்து உலகுடையாளொடும் வீற்றிருந்தருளிய கோவிராஜகேசரி பன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க* சோழதேவர்க்கு யாண்டு நாற்பத்தாறுவது† சோழ மண்டலத்து ராஜ நாராயண வளநாட்டு விளநாட்டு அரைசூர் சிவப்ராஹ்மணன் பாலாஸ்ரீயன் சாத்தன்சிவப்பிரியனை சோழம்ப நாயகன் கங்கைகொண்ட சோழவளநாட்டு திருமுனைப்பாடி கீழூர் நாட்டு ஆதிராசமங்கலியபுரத்து‡ உடையார் திருவீரட்டானமுடையார் திருப்பங்குனி உத்திரத் திருநாளில் உடையார்திருச்சிற்றம்பலமுடையார்திருவெழுச்சிக்குபெருந் திருவமுதுக்கு செந்நெலரிசி பதின்கலத்துக்கு இரண்டஞ் சாக்கி நெல் இருபத்தைந்கலமும் பல வர்க்கத்துக் கறியமுது மூவாயிரப்பலத்துக்கு நெல் முக்கலமும் நெய்யமுது குறுணிக்கு முக்கலமும் மிளகமுது நாழிக்கு நெல் நாற்கலமும் தயிரமுதுகலத்துக்கு நெல்கலமும் சற்கரையமுது நிறைநாலு

---

*முதற் குலோத்துங்கன். †கி. பி. 1116. ‡திருவதிகை.

க்கு நெல்நாற்கலமும் உப்பமுது தூணிக்கு நெல்கலமும் புளி யமுது நிறைஒன்றுக்கு நெல்கலமும் அடைக்கா யமுதுக்குப் பாக்கு ஆயிரத்துக்கும் வெற்றிலைப்பற்றலும்பதுக்கும் திரமம் இரண்டுக்கு நெல் அறு கலமும் சாத்தியருளச் சாந்துக்கும் கற்பூரத்துக்கும் காசு ஒன்றுக்கு நெல் இருபதின் கலமும் செங்கழுநீர் திருப்பள்ளித் தாமம் இரண்டாயிரங் கொள்ளக் காசு அரைக்கு நெல் பதின் கலமும் சிதாரிக்கு நெல் இரு கலமும் வழக்கத்துக்குப் பல வர்க்கத்துப் பரிசட்ட உரு எண்பதுக்குக் காசு அஞ்சுக்கு நெல் நூற்றுக் கலமும் தானம் பண்ணியருள பொன் அரைக் கழஞ்சுக்கு நெல் இருபதின் கலமும் திருக்காப்பு நாணுக்குப் பொன் அரைக்காலுக்கு நெல் இருகலனே தூணிப் பதக்கும் அடிக்கீழிட்ட அரிசி பதக்குக்கு நெல் ஐங்குறுணியும் ஆக இந்நெல் இருநூற்று இருகலனே இருதூணிக்கும் கொல்லை நிலத்துக் காணியாகக் கொண்டு திருத்திவிட்டநிலமாவது உடையார் திருவீரட்டான முடையார் தேவதானமான கொழுந்தாழ்வார் ஏரி கரைக்குக் கிழக்கும் திருவீரட்டான முடையான் வாய்க்காலுக்கு வடக்கும் குப்பை என்று பேர் கூவப்பட்ட நிலத்துக்கு மேற்கும் சத்தியபாவை என்று பேர் கூவப்பட்ட நிலத் துக்கும் திருவீதி திருச்சிற்றம்பலமுடையான் என்று பேர் கூவப்பட்ட நிலத்துக்கும் நடுவுபட்ட நிலம் ஒரு வேலி. இந் நிலம் ஒரு வேலியும்....இத்திருவெழுச்சித் திருப்படி சந்தி ராதித்தவற்செல்லக் கடவிதாகப் பண்ணினான் அரசூருடை யான் சாத்தன் சிவப்பிரியனை கோழம்பநாயகன். இது பன்மாஹேஶ்வர ரக்ஷை.

இக் கல்வெட்டிலிருந்து இவ்வுத்ஸவம் ஒன்றுக்கு மட்டும் ஒரு வேலி நிலம் விடப்பட்டதென்றும், அலங் காரத்துக்கு 2000 செங்கழுநீர் புஷ்பங்கள் உபயோகப் பட்டனவென்றும் நிவேதனத்துக்குப் பதின்கல அரிசி, மூவா

யிரம் பலம் கறிகாய் வர்க்கம், குறுணி நெய், கலம் தயிர், 50 கட்டு வெற்றிலை, ஆயிரம் பாக்கு முதலியன உபயோகப்பட்டனவென்றும் அறிகின்றோம். மொத்தச் செலவு திட்டம் 200 கலம் நெல்லின் விலையளவு என்பதையும் அறிகிறோம். இவற்றிலிருந்து கூத்தப்பெருமான் திருவெழுச்சியும் பெருந் திருவமுதும் எவ்வளவு சிறப்பாக நடைபெற்றனவென்பதை ஒருவாறு உணரலாம். இக்காலத்தில் இவ்வுத்ஸவத்துக்கு எந்த ஆலயத்தில் 2000 செங்கழுநீர் புஷ்பங்களும் 50 கட்டு வெற்றிலையும் 1000 பாக்கும் செலவாகின்றன? எங்குமில்லையே! என்னே! சைவர் மனஞ் சுருங்கியவாறு! இதயத்தில் இக்கடவுள் கூத்தாடுவது நின்று விட்டதா? இக்கடவுள் திருக்கூத்தை நாம் நன்குணர்ந்து போற்றினால் தமிழ்நாடும் ஆநந்தத் தாண்டவம் புரியும். சுபம்.

# மழநாட்டுத் திருமங்கலம்

[கோவை கிழார்]

இவ்வூர் ஆனாய நாயனார் அவதரித்த திருப்பதி. அது சோழ நாட்டிலுள்ளது. திரிச்சிராப்பள்ளி தாலூக்காவில் கொள்ளிடத்திற்கு வடகரையில் உள்ள லால்குடி என்னும் திருத்தவத்துறை சென்று அங்கிருந்து வடக்கே இரண்டு கல்லில் உள்ள பூவாளூரை அடைந்து அதிலிருந்து மேற்கே ஒரு கல் அளவில் சென்றால் இத்திருப்பதியை அடையலாம். இத்தலத்தைச்சுற்றியுள்ள நாட்டிற்கு மழநாடு என்பது பண்டைப் பெயர். அந்நாட்டுச் சுமார்த்தப் பிராமணர்களுக்கு மழநாட்டுப் பிரகச்சரணத்தார் என்ற பெயர் இப்போதும் வழக்கத்தில் உண்டு. அந்நாடு பல பிரிவுகளை

முன் காலத்தில் கொண்டிருந்தது. அவைகளில் ஒன்று மேல்மழநாடு என்பது ஆகும். ஆகவே கீழ்மழநாடு ஒன்று இருக்கலாம். மேல்மழநாட்டில் உள்ள ஒரு ஊர் திருமங்கலம் என்பது. அந்நாட்டிற்குத் தலைநகர் திருத்தவத்துறை (லால்குடி) எனலாம். கீழ்மழநாடு என்ற பெயர் சாசனங்களில் கிடைக்கப்பெறவில்லை. மழநாட்டின் கிழக்குப் பாகத்தில் மழபாடி (இப்போது திருமலவாடி என்று வழங்குகிறது) என்ற திருப்பதி இருத்தலாலும் அது ஒரு சிறந்த தலமாகையாலும் அதுவே அக்கீழ்பாகத்திற்குத் தலைநகராக இருந்திருக்கலாம். இனி மேன்மழநாடு ஒரு சிறந்த செழிப்பான நாடென்று சேக்கிழார் ஒரு திருப்பாடலில் எடுத்துக் காட்டியுள்ளார்.

சுந்தரர் மழபாடிப் பதிகத்தில் "பொன்னார் மேனியனே..............மழபாடியுள் மாணிக்கமே.........." என்று அருளியிருத்தல் காண்க.

"மாடு விரைப்பொலி சோலையின் வான்மதி வந்தேறச்
சூடு பரப்பிய பண்ணை வரம்பு சுரும்பேற
ஈடு பெருக்கிய போர்களின் மேகம் இளைத்தேற
நீடு வளத்தது மேன் மழநாடெனும் சீர்நாடு"

இப்பாடலிலும் இதனை அடுத்துள்ள ஐந்து பாடல்களிலும் இம்மழநாட்டின் செழிப்பினை வெகு சுவையுடன் பல உவமையணிகளை இணைத்து ஆசிரியர் வருணித்திருக்கிறார்.

இம் மழநாட்டைப்பற்றிக் கூறும் கல்வெட்டுக்களை ஆராய்ந்துபார்த்தால் அது கொள்ளிடத்திற்கு வடகரையில் கீழ்மேலாக வெகுதூரம் பரவியிருந்த ஒருநாடு என அறியலாம். கல்வெட்டுக்களின் ஆதாரவினால் மழநாட்டு ஊர்களாக சங்கேந்திமங்கலம், துறையூர், ஔவச்சேரி, பிரமபுரிநல்லூர், பராந்தகபுரம், திருமணமேடு, இடையாற்றுமங்கலம்,

நித்தியவினீதமங்கலம், தூயவேலி, திருநச்சியூர், மணற்கால், திருமழுவனூர், தூவேதிமங்கலம், திருமங்கலம், தாமோதர மங்கலம் முதலிய பெயர்களைக் காண்கிறோம். மழநாட்டுக் கீழ்ப்பாகத்திற்குத் திருமழவாடி நாடு என்று பெயர் இருந்தது என்று நத்தமாங்குடிச் சாசனத்தால் அறிகிறோம். ஆகவே அப்பெயரே கீழ் மழநாட்டின் பெயராக அமைந்திருக்கலாம்.

இனிச் சாசனங்களின்படி மழநாட்டு வெள்ளையூர்க் கண்டம், பாச்சில் கூற்றம், இடையாற்றுநாடு, கலார்க்கூற்றம் என்ற பிரிவுகளைக் கொண்டிருந்தது. அவைகளில் கலார்க் கூற்றத்தில்தான் திருமங்கலம் இருக்கிறது.

மேலும் மழநாடு பல ஆட்சிகளில் பல பெயர்களைக் கொண்டிருந்தது. சோழர்கள் தங்கள் பெயர்களை நிலை நிறுத்துவதற்காக நாடுகளின் பெயர்களை அடிக்கடி மாற்றுவது வழக்கம். தங்கள் மனைவி, உடன்பிறந்தார், தகப்பன்மார் முதலியவர்களின் பெயர்களாலும் அழைப்பது உண்டு. அவ்விதம் மழநாடு மதுரை கொண்ட பரகேசரி வர்மன் இராஜராஜ கேசரிவர்மன் இவர்கள் காலத்தில் வடகரை மழநாடு என்றும், இராஜேந்திரன், வீரராஜேந்திரன் இவர்கள் காலங்களின் இராஜஸ்ரய வளநாடு என்றும், குலோத்துங்கன் காலத்தில் உலக முழுதுடைய நாடென்றும், விக்கிரமன் காலத்தில் திரிபுவன முழுதுடைய வளநாடென்றும், பரகேசரி ராஜராஜன் காலத்தில் உலகுடைய கோக்கிழானடி நாடென்றும் பிந்திவந்த அரசர்கள் (நாயக்கர்) காலத்தில் ராஜராஜ வளநாடென்றும் பெயர்களைக் கொண்டிருந்தது. இதற்காதாரம் லால்குடி, சங்கேந்தி, சமயபுரம், திருமங்கலம் முதலிய ஊர்களிலுள்ள சாசனங்களேயாம்.

இனி மழநாடென்பது மழவர் என்ற குடிகள் வாழ்ந்த நாடு எனல் வேண்டும். இந்நாட்டுத் தலைவர்களும் மழவர்,

மழவராயர், முதலிய பெயர்களை வகித்து வந்தனர். திருப்பாச்சில் ஆச்சிரமத்தில் கொல்லி மழவன் என்ற சிற்றரசனின் மகளுக்கு நோய் தீர்க்க சம்பந்தர் அருளிச் சென்று அவளுக்கு இருந்த முயலகன் என்ற நோய் தீர்த்தது அப் பெரியார் புராணத்தால் அறிகிறோம். திருமங்கலத்திலுள்ள ஆலயத்தில் உள்ள மூர்த்திக்குத் திருமழுவுடைய நாயனார் என்ற பெயரும் இருந்ததாக அவ்வாலயக் கல்வெட்டு கூறுகிறது. மழுகொண்டு தொழில் புரிந்ததால் மழவர் எனப் பெயர் வந்ததோ என்பது ஒரு ஐயம். மேலும், கொங்கு நாட்டின் ஒரு பாகத்திற்கு மழகொங்கம் என்ற பெயர் இருந்ததாகவும் வேள்விக்குடிச் சாசனம் கூறுகிறது. ஆகவே இம்மழநாடு கொங்கு நாட்டுக் கொல்லிமலை முதல் திருமழபாடி வரைக்கும் பரவியிருந்தது எனலாம்.

இந்நாட்டின் மேல் பாகமாகிய மேல் மழநாட்டில் உள்ள ஒரு ஊர் மங்கலம் என்று சேக்கிழார் ஒரு பாடலில் கூறுகிறார்.

“ பொங்கரில் வண்டு புறம்பலை சோலைகள் மேலோடும்
வெங்கதிர் தங்க விளங்கிய மேன்மழ நன்னாடாம்
அங்கது மண்ணின் அருங்கல மாகஅதற் கேயோர்
மங்கல மானது மங்கல மாகிய வாழ்மூதூர் ”

இம்மூதூர் வெகு சிறப்புடன் விளங்கியிருந்தது என்பதற்கு இவ்வூரில் உள்ள ஆலயக்கல்வெட்டுக்களே சான்றாகும். இதுவரையில் 13 கல்வெட்டுகளைப் பிரதி எடுத்திருக்கிறார்கள். அவ்வாலயத்து ஈசனைத் தற்காலம் சாமவேதீசுவரர் என்று கூறுகிறார்கள். ஆனால் கல்வெட்டுக்களில் பரசுராமீசுரமுடையார் என்றும், திருமழுவுடைய நாயனார் என்றும் அப்பெயர் அமைந்திருக்கக் காண்கிறோம். பரசு என்றால் மழு என்றறியவேண்டும். இக்கல்வெட்டுகள்

ராஜராஜ ராஜகேசரி வர்மன் காலம் முதல் மதுரை விசுவநாத கிருஷ்ணப்ப நாயகன் காலம்வரை பரவியிருக்கின்றன.

| அரசர் | வருஷம் | காலம் | |
|---|---|---|---|
| இராஜராஜ கேசரிவர்மன் | 5 | 990 A.D. | நாகப்பட்டினத்துக் கரு ஊர்க் கந்தழி - சந்தியா தீபம் வைத்தது. |
| ,, | 15 | 1000 ,, | கண்டராதித்தர்மனைவியும் உத்தம சோழர் தாயுமான பராந்தகன் மகாதேவடிகளான செம்பியன் மாதேவியார் இறையிலி பூதானம் செய்தது. |
| ராஜேந்திரன் I (1013 — 1045) | | | திருமங்கலச் சபையார் மார்கழி ரேவதியிலிருந்து 7 நாள் உற்சவத்திற்குப் பூதானம் செய்தது. |
| ,, | 30 | 143 | தாமோதர மங்கலத்துச் சபையார் இறையிலி பூதானம் - பரஞ்சோதி மடத்துத் தவசிகளுக்கு அன்னதானம். |
| வீரராஜேந்திரன் | 3 | 1065 | செம்பியன் மூலையூர் நாட்டு மூவேந்த வேளான் தந்த பசுக்களுக்காக ஆலயத்தார் நந்தா தீபம் வைப்பது. |
| குலோத்துங்கன் | 17 | 18-6-1086 | பரசுராமீசர்க்கு இறையிலி பூதானம். |

| அரசர். | வருஷம் | காலம் | |
|---|---|---|---|
| குலோத்துங்கன் | 46 | 15-6-1116 | திருவையோத்தியாழ்வார் ஆலயத்தில் கூடிய சபையில் பலபேரிடம் வாங்கிய பூமியை இறையிலி தானம். |
| விக்கிரமன் | 14 | 1132 | அர்ச்சனா போகத்துக்காக பூதானம். |
| ராஜராஜன் II | 3 | 6 6-1149 | திருமங்கலக்குடிகள் செய்த நில விற்பனை. |
| ,, | 12 | 14-1157 | ஷை |
| ராஜாதிராஜன் | 6 | 1177 | ஆத்திரேயன் நாராயணன் யக்ஞபட்டன் சிவபிராமணர்களுக்குப் பொன் கொடுக்க அமாவாசை உற்சவத்திற்கு ஒத்துக் கொண்டது. |
| ராஜராஜன் III | 22 | 22-4-1238 | எயில் நாட்டுச் சந்திரலேகை அம்பலத் தாடுவான் சீராமதேவனான காலிங்கராயன் உலகுடைய நாயகிக்கு தானம். |
| விசுவநாத கிருஷ்ணநாயகர் (மதுரை) | | 29-8-1567 | அரசன் வரியைக் குறைத்தது. |

ஆகவே இவ்வாலயச் சாசனங்களால் சோழர்களில் 250 ஆண்டுகளின் சரிதமும் மதுரை நாயக்கரில் ஒரு சரிதச் செய்தியும் கிடைக்கின்றன.

இவ்விதம் சரிதக்கீர்த்தி பெற்ற மழநாட்டுத் திருமங்கலத்தில் ஆயர் குலத்தில் ஆனாய நாயனார் அவதரித்தார். அதனைச் சேக்கிழார்

"ஒப்பில் பெருங்குடி நீடிய தன்மையில் ஓவாமே
தப்பில் வளங்கள் பெருக்கி அறம்புரி சால்போடும்
செப்ப உயர்ந்த சிறப்பின் மலிந்தது சீர்மேவும்
அப்பதி மன்னிய ஆயர் குலத்தவர் ஆனாயர்"

என்பர். அவ்வடியார் சைவத்தில் அன்பு பூண்டு மனமொழி மெய்களில் சிவபெருமான் திருவடியையே போற்றி வந்தார். அவர் இடையர்களுக்குத் தலைமை பூண்டு பசுக்கூட்டங்களைக் காத்து வந்தார். பசுக்களும் பெருகலாயிற்று. பசுக்காத்தலுடன் வேய்ங்குழல் வாசிப்பதும் அவரது வழக்கம்.

ஒருநாள் கார்காலத்தில் வழக்கம்போல் பசுகாக்கக் காட்டிற்குப் போகையில் பூத்து நின்ற கொன்றை மரமொன்று அவர் கண்ணிற்பட அது சிவபிரான் தாழ்சடைக் கொன்றையை அவருக்கு நினைப்பூட்டியது. அதனால் நாயனார் மனம் ஒன்றி வேய்ங்குழலில் ஐந்தெழுத்தை வாசிக்கலானார். அவ்விசையின் திறத்தால் உயிர்களெல்லாம் அசைவற்று நின்றன. சராசரங்கள் எல்லாம் ஒன்றுபட்டன. சிவத்தின் செவியில் அக்குழலோசை நுழைந்தது. ஈசன் அன்போடு தோன்றி ஆனாயநாயனாரை அழைத்து அணைந்து கொண்டார். அக்கணமே அவர் பேரின்பம் உற்றனர்.

இப்பெரியார் குழல் ஊதினதை வருணிக்கையில் சேக்கிழார் இசை நூலின் நுட்பங்களை எடுத்து ஓதியிருக்கிறார். அது தமிழர் இசை நுட்பம் ஆகும். அது மிகவும் ஆராயத் தக்க ஒரு இயல் என்பது அறிக.

# திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம்

[திரு : திக்கம் - சி. செல்லையாபிள்ளை அவர்கள்]

" காதலியைக் கைப்பற்றிக் கொண்டுவலங் கொண்டருளித்
தீதகற்ற வந்தருளுந் திருஞான சம்பந்தர்
நாதனெழில் வளர்சோதி நண்ணியத னுட்புகுவார்
போதநிலை முடிந்தவழிப் புக்கொன்றி உடனானார்-"

பதவுரை :—தீதகற்ற வந்தருளுந் திருஞான சம்பந்தர்—சமணம் பௌத்தம் ஆகிய சமயங்களைத் தூராறுத்து, அவற்றான் ஒளிமழுங்கிய வைதிகசைவத்தைப் பண்டுபோல் நிறுவுவான் திருஅவதாரஞ் செய்தருளிய திருஞானசம்பந்தப் பெருமான்;

போதநிலை முடிந்தவழி—அவ்வவதாரம் முடிந்தவிடத்து, காதலியைக் கைப்பற்றிக் கொண்டு—தோத்திர பூரணாம்பிகையாராகிய தம் தேவியாரைக் கைப்பற்றிக் கொண்டு

நாதன் எழில்வளர் சோதி நண்ணி—எப்பொருட்கு மிறைவராகிய சிவபிரானது பேரழகமைந்த சோதி சொரூபத்தைக் கிட்டி,

வலங்கொண்டு—அதனைப் பிரதக்கணஞ் செய்து, அதனுட் புகுவார்—அதனுட்புகுந்தவராய், புக்கு ஒன்றி உடனானார்—ஆண்டுப் பரமசாயுச்சிய முத்தியைத் தலைக்கூடினார்.

விளக்கவுரை :—போந்தநிலை என்பது எதுகைநோக்கிப் போதநிலை என்றாயிற்று. போதநிலை என்பதற்குப் பண்டுதிருவடிமறவாப் பான்மையராயிருந்த முத்திநிலையினீங்கித் தொண்டினிலை தருவான் கொண்டருளிய அருள் நிலையாகிய சீவன் முத்திநிலை எனினுமாம். இங்ஙனம், பிள்

ளையார் திருவவதாரஞ்செய்த அவதரமும் அவ்வமயத்து அவர் மேற்கொண்டுள்ள நிலையும் ஒருங்கே உணர்த்தியிருக்கும் பெருவனப்பு நோக்கத்தக்கது.

அறுபான்மும்மை நாயன்மாரும் சீவன்முத்தர்கள் என்பதனை விளக்கிச் சேக்கிழார் சுவாமிகள் "அருளினீர்மைத் திருத்தொண்டு" என நுதலிச் சேறலின், "போதம்" என்பதற்குச் சிவபோதம் எனப்பொருள் கோடல் பொருந்தாது. வாசனாமலந்தானு மில்லாத எம்பெருந்தகையார்க்குச் சிவபோத முளதாமா றெங்ஙனெனவொழிக. அது தானுமில்லாமையை முன்னர்க் காட்டுதும்.

"புக்கு ஒன்றி உடனானார்" என்பது "அயரா அன்பின் அரன்கழல் செலும்" என்றாற்போலப் பொருள் பயந்து நின்றது. புகுதல் அறிவின் தொழில். அது பரமசிவ பூரணத்திற் றிளைத்தல். "தன்னை யறிவித்துத் தான்றானாச் செய்தானைப் பின்னை மறவாமை." ஒன்றுதல் இச்சையின் தொழில். உடனாதல் செயலின்றொழில்.

சமணம் பௌத்தம் ஆகிய புறப்புறச் சமயங்கள் தலை எடுத்து உண்மை நெறியாகிய வைதிக சைவம் ஒளி மழுங்க, அதனைக்கண்ட சிவபாதவிருதயர் மனங்கவன்று தந்தோணி புரேசரை நோக்கிப் "பரசமய நிராகரித்து நீறாக்கும், புனை மணிப்பூண் காதலனைப் பெறப்போற்றுந் தவம்புரிந்தா" ராக, அவர் தவத்திற்கிரங்கி வேண்டுவார் வேண்டுவதே யீயும் பிரானார், பிறவிக்கு வித்தாய வினை ஒரு சிறிதுமின்றி மலபரிபாகம் பெற்றுச் சாமீப்பிய முத்தியையடைந்த முத்தான்மாவாகிய பிள்ளையாரை, "நீ நிலவுலகிற் சென்று சிவபாதவிருதயனுக்குப் புத்திரனாகப் பிறந்து பரசமயங்களை நிராகரித்து வைதிக சைவத்தை நிறுவி மீண்டு எம்மிடம் வருதி" எனப்பணித்த பணியைச்சிரமேற்கொண்டு திருவவதாரஞ் செய்தார் என்பதையும், அங்ஙனந் திருவவதாரஞ்

செய்தவர். சிவஞான சம்பந்தமுடையவரா யிருந்தாரேயன்றி வாசனுமலந்தானுமில்லாதவர் என்பதனையும் உணர்த்துவான் அப்பரிசு இப்புராணத்துப் பலவிடங்களினுந் தெரித்துக் கூறிய வழியும், ஈண்டுஞ் சிறப்புவகையாற் கிளந்தெடுத் தோதல் இன்றியமையாமை நோக்கியும், எம்மனோர் மலைவு தீர்த்தற்பொருட்டும் " தீதகற்ற வந்தருளுந் திருஞான சம்பந்தர் " என்றார். திருஞானசம்பந்தர் என்னுந் திருநாமம் ஈண்டு எடுத்தலோசை பெறுமாறு அமைந்திருத்தல் நோக்குக. இனி,

> " பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர் தமைப்பரமர்
> மண்டுதவ மறைக்குலத்தோர் வழிபாட்டி னளித்தருளத்
> தொண்டினிலை தரவருவார்..............."

என்றமையால் எம் திருஞானசம்பந்த வள்ளலார் பண்டே முத்திபெற்று எம்பிரானிடத்து அயரா அன்பு செய்திருந்தவர் என்பதூஉம், அப்பான்மையினரைச் சிவபாதவிருதயர் செய்த பெருந்தவத்தானவர்க்குப் புத்திரராகக் கொடுத்தருளினர் என்பதூஉம், அங்ஙனம் அவர் திருவவதாரஞ் செய்தது பரசமயங்களை நிராகரித்து வைதிக சைவத்தையும் அதன் கண்ணதாகிய சற்புத்திர மார்க்கத்தையும் சிறப்பு வகையால் நிறுவுதற் கென்பதூஉம் பெற்றாம். இன்னும் அத்தன்மையராதலைத் " தம்மேலைச் சார்புணர்ந்தோ சாரும் பிள்ளைமைதானோ " எனவும்

> " பாசமற்றில ராயினும் பார்மிசை
> ஆசை சங்கரற் காயின தன்மையால்
> தேசு மிக்க திருவுரு வானவர்
> ஈசனைத் தொழு தேதொழு தேகினர் "

எனவும் சேக்கிழார் பெருமானார் விளக்கிச் சேறலானு முணர்க.

மேலைச்சார்பு—சாமீப்பிய முத்திக் கண்ணதாய சம்பந்தம். ஆண்டுப் புத்திரப் பான்மையால் "அம்மே அப்பா" என அழைக்கும் உரிமை உடைமை பற்றியும் ஈண்டும் மூவாட்டைப் பருவந் தொடங்கப் பெற்றவராதலின் அப்பருவத்து முதலிற் பயில்வது "அம்மே அப்பா" என்னுஞ் சொற்களாயினமையானும், இவ்விரிடத்துமுள்ள ஒற்றுமை நயம் பற்றியே "தம்மேலைச் சார்புணர்ந்தோ சாரும் பிள்ளைமைதானே" எனவுங் கூறியருளினர்.

இனி, "பாசமற்றிலர்" என்றற்றொடக்கத்துச் செய்யுளானும், இம்மைக்கண் வாசனைமலந்தானுமில்லாதவர் என்பதூஉம், அம்மைக்கணுள்ள எம்பிரானிடத்து அயரா அன்பே இம்மைக்கண்ணு முளராயினர் என்பதூஉம் பெற்றாம். அற்றேல் அஃதங்ஙனமாக, எம்பிள்ளையார் வேம்பிற்றலைப் பட்டு அதனையுண்டபுழு கரும்பிற்றலைக் கூடிய வழியும்—வாசனை வயத்தால் வேம்பின் சுவையை விரும்புமாபோலாது கரும்பிற்றலைப்பட்டு அதனையுண்ட புழு வேம்பிற்றலைப் பட்ட வழி அதனை உவர்த்து மீண்டுங் கரும்பிற் றலைக்கூடு மாறுபோலத் தொண்டினிலே தருவான் ஈண்டு திருவவதாரஞ் செய்த வழியும் இம்மைப் பற்றை அறத்துறந்து எம்பிரானிடத்துள்ள அன்பொன்றனையே உடையராயினர் என்பதூஉந் தெற்றென உணர்க.

பாசமற்றிலர் என்பது பாசம் + அற்று + இலர் எனப் பிரியும். பாசமறுதல்—மும்மலபந்தம் நீங்குதல்; இலராதல், வாசனைமலம் நீங்குதல். நாதன் எழில் வளர்சோதி சுத்த மாயையின் தோற்றமாய் நின்ற திருவருட் சோதி ஆச்சாபுரமென வழங்கும் திருநல்லூர்ப் பெருமணம் என்னும் பிள்ளையார் முத்திபெற்ற திருப்பதியில் எம்பிள்ளையார் சத்தி சமேதராக எழுந்தருளியிருக்கின்றார். அவ்விடத்து எம் அன்னையார் திருநாமம் "தோத்திர பூரணாம்பிகை" எனக்

கல்லிற் பொறிக்கப் பட்டிருக்கின்றது. அதனை இன்றுங் காணலாம்.

மறைச் சடங்குகள் ஒரு சிறிதுங் குறைவின்றி நடத்தப் பெற்ற திருமணத்தில் தீவலஞ் செய்தலாகிய கிரியை வந்துழி "விருப்புறு மங்கியாவார் விடையுயர்த் தவரே என்று" கொண்டவராதலால் எம் சீகாழிப் பெருந்தகையார் எரிவலங் கொள்ளவேண்டி "அருப்புமென் முலையினார் தம் அணிமலர்க் கைபிடித்து" "இந்த இல்லொழுக்கம் வந்து சூழ்ந்ததே இவடன்னோடும், அந்தமில் சிவன்தாள் சேர்வன்" எனச் சென்று திருக்கோயிலிற் சேர்ந்து ஆண்டுக் காணப்பட்ட "நாதனெழில் வளர்சோதி நண்ணி" வலஞ்செய்தார் என்பார் "காதலியைக் கைப்பற்றிக் கொண்டு வலங்கொண்டருளி" எனவும்,

"சீர்பெருகு நீலநக்கர் திருமுருகர் முதற்றொண்டர்
ஏர்பெருகு சிவபாத விருதயர்நம் பாண்டார்சீர்
ஆர்திருமெய்ப் பெரும்பாணர் மற்றெனையோர் அணைந்துளோர்
பார்நிலவு கிளைசூழப் பன்னியரோ டும்"

புகுதற்கும்,

"அணிமுத்தின் சிவிகைமுதல் அணிதாங்கிச் சென்றோர்கள்
மணிமுத்த மாலைபுனை மடவார்மங் கலம்பெருகும்
பணிமுற்று மெடுத்தார்கள் பரிசனங்கள் வினைப்பாசந்
துணிவித்த வுணர்வின்றாய்த் தொழுதுடன்புக்கு"

தத்தமக்கியைந்த பதவிகளில் ஒடுங்குதற்கும்,

"ஆறுவகைச் சமயத்தி னருந்தவரும் அடியவரும்
கூறுமறை முனிவர்களும் கும்பிடவந் தணைந்தவரும்
வேறுதிரு வருளினால் வீடுபெற வந்தவரும்"

தத்தமக்கியைந்த பதவிகளை அடைதற்கும் அமைந்த ஈறில் பெருஞ்சோதி என்பார் "நாதன் எழில் வளர்சோதி" எனவுங் கூறியருளினார்.

புகுவார் காலவழு; பாதத்தின் தொழில். "தொண்டி னிலே தாவருவார்" என்றாற்போல.

எம் சீகாழிப் பெருவாழ்வாகிய திருஞான சம்பந்த வள்ளலார் புத்திரமார்க்கத்தின்பேறாகிய சிவசாமீப்பியத்தை அடைந்து திருவடியினயரா அன்பு செய்திருந்த முத்தாதலானும், எம் அன்னையார் பொற்கிண்ணத் தூட்டிய திருமுலைப் பாலுண்டமையானும், இவ்வவதாரத்துஞ் சற்புத்திர மார்க்கத்தை நிறுவுவான் வந்தருளினமையானும் இன்னோரன்ன பல ஏதுக்களானும் "சிவக்கன்று" "புரமெரித்தார் திருமகனார்" என்றற்றொடக்கத்துத் திருநாமங்களால் அழைக்கப்பட்டாரேயன்றித் துட்டநிக்கிரக சிட்டபரிபாலனஞ் செய்வான் சிவபிரான் கொண்டருளிய தடத்த நிலையாகிய ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளின் திருவவதாரமன்றென்பதனை ஆராய்ந்தறிக. தூரிய மூர்த்தியாய் எம்பெருமானுக்கும் எம்பெருமாட்டிக்கும் நடுவணாக எழுந்தருளியிருக்கும் குமாரக் கடவுள் கருவிற் புகுதலும், பிறத்தலும், மீண்டுபுக்கொன்றி உடனாதலுமாகிய அத்துவித முத்தியை அடைதலும் அவசித்தாந்தமாதலின் அதனை விடுக்க.

இன்னுங் கந்தபுராணத்து

"சித்திலப் படுபர்தருஞ் சிவிகையு நெறியே
முத்தமிழ்க் கொரு தலைவனு மதலைக்கு முதல்வன்
உய்த்த வாறெனக் குமரவேள் வீரனுக் குதவ"

எனக் கூறியிருத்தலுங் காண்க. திருஞானசம்பந்த சுவாமிகள் குமாரக்கடவுளது திருவவதாரமாயின் "முத்தமிழ்க் கொரு தலைவனுமதலைக்கு" என்னாது குமரவேளுக்குத் தலைவனுய்த்த வாறெனக் குமரன் வீரனுக்குதவினான் எனக் கூறியிருத்தல் வேண்டும். அங்ஙனங் கூறாமையும் நோக்குக.

பல விடங்களிலும் உபசாரமாய்ச் சுப்பிரமணியப் பெருமானுக்கும் திருஞானசம்பந்த சுவாமிகளுக்கும் அபேதங் கூறும் அருணகிரிநாத சுவாமிகள் தம் கந்தரநுபூதியில்

"செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்"

என மலைவு தீர்த்துச் சித்தாந்தஞ் செய்து அறுதியிட்டுக் கூறியிருத்தலும் நோக்குக.

திருச்சிற்றம்பலம்

சிவஞான முனிவர் அருளிச் செய்த

# தருக்க சங்கிரக அகவல்

(சூ த் தி ர ம்)

தமிழரும், தமிழ்மருத்துவருமான
[மாங்காடு - வடிவேலு முதலியார்]

தருக்க சங்கிரகமும், தருக்கசங்கிரக தீபிகை என்னும் உரையும் கைலாய பரம்பரைத் திருவாவடுதுறைச் சித்தாந்த ஞாயிறாகிய நமச்சிவாய மூர்த்திகள் மரபில் வந்த சிவஞான சுவாமிகளால் தமிழில் செய்யப்பெற்றன என்பது அளவை நூல் வல்லார் யாவரும் உணர்ந்ததேயாம்.

அவர் அந்நூல் செய்தகாலத்து முன்னர் அவ்வளவைகளை யெல்லாம் அகவல் வடிவமாகச் செய்துகொண்டு பின்னர் அவற்றைத் தனித்தனி விளக்கி உரைநடையாகச் செய்திருக்கலாமென்று சில வழிகளால் ஏற்படுகின்றது.

அவ்வழிகளாவன :—தாம் செய்துகொண்ட அகவற்பாவின் வரிசைப்படியே உரைநடையிருப்பதும், அச்செய்யுள்களின் கருத்துகளுக்குச் சிறிதும் மாறுதலில்லாமையுமேயாம். அங்ஙனம் செய்யப்பட்ட அகவல்கள் முழுவதும் கிடைக்கவில்லை. அவற்றில் இருபது அகவல்களே பிற்காலத் தொருவரால் அச்சிடப் பெற்றிருக்கின்றன. ஆனால் அவை அகத்திய சூத்திரம் என்கிற பேரால் வெளிவந்துள்ளன.

அவ்வகவல்களில் ஐம்பத்து மூன்று, விரோதி கிருது ஆண்டு ஐப்பசித் திங்களில் கன்னிவாடி மகாராஜாவின் மந்திரி திண்டுக்கல் முத்துவீரப்பிள்ளை என்பவரால் இலக்கணக் களஞ்சிய அச்சுக்கூடத்தில் ஈசான தேசிகர் செய்த இலக்கணக் கொத்து மூலமும் உரையும், யாப்பருங்கலம் மூலமும் என்று அச்சிட்ட ஒரு பொத்தகத்தின் கடைத் தாளில்,

“சிவஞான தேசிகர் அருளிச்செய்த தருக்கசங்கிரகம்” என்கிற பேருடன் காணப்படுகின்றன.

அவை அப்படியே மறைந்துவிடக் கூடாதென்கிற எண்ணத்தினால் அவற்றின் ஒவ்வொரு அகவலுக்கும் தலைப்புப் பேரிட்டு இச்சித்தாந்த வாயிலாக வெளியிட்டனம்.

அளவை நூல் வல்லார் யாவரிடத்தாவது இவ்வகவல்களுக்குப் பின்வரக்கூடிய தொடர்ச்சி அகவல்கள் கிடைத்திருப்பின் அவற்றையும் இச்சித்தாந்த வாயிலாக வெளிப்படுத்தல் மிகவும் நன்மையாகும்.

## அகவல்

### இறைவன் வணக்கம்

ஆதியிற் றமிழ்நூ லகத்தியற் குணர்த்திய
மாதொரு பாகனை வழுத்துதும்
போதமெய்ஞ்ஞான நலம்பெறற் பொருட்டே.

## தற்சிறப்புப் பாயிரம்

*மன்ற வாணனை மனத்திடை நிறுவிவண் டுறைசை*
*வென்ற சீர்நமச் சிவாயமெய்க் குரவனை வணங்கி*
*என்றனைப்பொருஉ மிளையவர்க் கினிதுணர் வுதிப்பத்*
*தென்றமிழ்ச் சொலாற் செயப்படுந் தருக்கசங் கிரகம்.*

## ஏழு பொருள்கள்

*பொருள்குணங்கருமம் பொதுச்சிறப்பொற்றுமை*
*இன்மை யெனப்பொரு ளேழெனமொழிப.* 3

## 1. பொருள் ஒன்பது

*பொருளெனப் படுவது தெரிவுறக் கிளப்பின்*
*[1]மண் [2]ணீ [3]ரனல்[4]கால் [5]வெளி [6]பொழு [7]தாசை*
*[8]ஆன்மா [9]மனமென வொன்பது வகைத்தே.* 4

## 2. குணம் இருபத்துநான்கு

*[1]உருவஞ் [2]சுவையே [3]நாற்றம் [4]ஊறு [5]எண்*
*[6]அளவு [7]வேற்றுமை [8]புணர்ச்சி [9]பிரிவெனூஉ*
*[10]முன்மை [11]பின்மை [12]திண்மை [13]நெகிழ்ச்சி*
*[14]சிக்கெனல் [15]ஓசை [16]யுணர்ச்சிய தெனூஉ*
*[17]இன்பந் [18]துன்பம் [19]விருப்பு [20]வெறுப்பு*
*[21]முயற்சி [22]அறம் [23]மறம் [24]வாதனையெனுக்*
*குணமெனப் படுவ தறுநான்கு வகைத்தே.* 5

## 3. கருமங்கள் ஐந்து

*[1]எழும்பல் [2]வீழ்தல் [3]வளைதல் [4]நிமிர்தல்*
*[5]நடத்தலென்றுங் கருமம் ஐவகைத்தே.* 6

## 4. பொதுமை இரண்டு

*பொதுமை [1]மேல் [2]கீழ்என இருவகைத்தே.* 7

### 5. சிறப்புபல

மன்னிய பொருளின் கண்ணவாயவற்றின்
வேற்றுமை தெரிப்பன பலவாஞ்சிறப்பே.

### 6. ஒற்றுமை ஒன்று

ஒற்றுமையாப்பஃ தொன்றே யென்ப. 9

### 7. இன்மை நான்கு

[1]முன்னையின்மை [2]யழிவுபாட்டின்மை
[3]முழுதுமின்மை [4]யொன்றினொன்றின்மையென்
றின்மை நால்வகைத் தென்மனார் புலவர். 10

### 1. பொருளில் மண்முதல் நான்கு

[1]மண் [2]நீர் [3]அனல் [4]கால் என்னும் நான்கும்
நிரலே நாற்றந் தட்பந் திட்பம்
உருவி லூற்ற முடையவாகி
மெய்ப்பொரு ளழிபொரு ளெனவிரு வகைய. 11

### மெய்ப்பொருள் அழிபொருள்

[1]அணுக்கள் மெய்ப்பொருள் காரியம் அழிபொருள். 12

### இவற்றில் (1) மண்

மண்ணெனப்படுவது நாற்றம் உடைத்தாய்
நிலை நிலையில்ல தெனவிரு வகைத்தே. 13

நிலையணுப் பொருள்நிலை யில்லது காரியம். 14
அதுவே, [1]உடல் [2]பொறி [3]விடயம் எனமூ வகைப்படும்.

### (1) உடல்

அவற்றுள் ; நம்மனோர் யாக்கை மண்கூற்றுடம்பு. 16

### (2) பொறி

நாற்றங் கவர்வது நாசி நுனியது
மூக்கெனப் பெயரிய ததன்பொறி யென்ப. 17

(3) விடயம்

மண்கல் முதலிய விடய மாகும். 18

(2) நீர் 1. உடல்

நீரிறை வரைப்பின் கட்டுநீ ருடம்பு. 19

(2) பொறி

சுவைத்திறங் கவர்வது நாக்கின் நுனியது
நாவெனப் பெயரிய ததன்பொறி யென்ப. 20

(3) விடயம்

கடல்யாறாதி விடயமாகும். 21

(3) அனல் 1. உடல்

கதிரோன் வரைப்பின் கட்டனல் உடம்பு. 22

(2) பொறி

உருவங் கவர்வது கருமணி நுனியது
கண்ணெனப் பெயரிய ததன்பொறி யென்ப. 23

(3) விடயம்

மண்ணின் விண்ணின் வயிற்றினா கரத்தினென்
றந்நான் கிடத்தின் விடயநால் வகைத்தே. 24

(4) (கால்) வளி 1. உடல்

வளியிறை வரைப்பின் கட்டு வளியுடம்பு. 25

(2) பொறி

ஊற்றங் கவர்வது மீந்தோற் கண்ணது
தோலெனப் பெயரிய ததன்பொறி யென்ப. 26

(3) விடயம்

விடய மாமுத லசைதற் கேது. 27

வளிவகை

பிராண னுடலகத் தியங்குங் காற்றஃ
தொன்றே செயற்கையிற் பல்பெயர் பெறுமே. 28

போருளில் வெளிமுதல் ஐந்து

[1]விசும்பே [2]காலம் [3]திசையோ [4]டான்மா
[5]மனமெனு மைந்து நிலைப்பொரு ளாங்கண்
முன்னைய நான்கு நிறையுடை யவ்வே. 29

1. விசும்பின் தன்மை

அவற்றுள் ; ஓசைப்பண்பிற் றுகா யம்மே. 30

2. காலத்தின் தன்மை

இறப்புமுதல் வழக்கிற் கேதுக்காலம். 31

3. திசையின் தன்மை

கிழக்குமுதல் வழக்கிற் கேதுத்திசையே. 32

முப்போருளின் தன்மை

அம்முப் பொருளு மொரோவொன் றென்றே. 33

4. ஆன்மாவின் தன்மை, வகை

அறிவிற் பண்பிற் றன்மா வதுதான்
[1]இறையு [2]முயிருமென் றுயிரு வகைத்தே. 34

1. இறைவன் தன்மை

இறையே யீசன்முற் றறிவனோர் முதலே. 35

2. உயிரின் தன்மை

உயிர்தா னுடல்தொறும் வெவ்வே றுகும். 39

5. மனத்தின் தன்மை

இன்ப முதலிய பண்புறத் தருஉம்
கருவியாம் பொறிமன மஃதுயிர்தோ
றின்றியமையாது வேண்டலிற் பலவாய்
அணுவடிவிற்று மென்மனார் புலவர். 37

பொருள் ஒன்பதும் முற்றுப்பெற்றது.

## குணம் இருபத்துநான்கில்

### 1. உருவம்

அறுநாற் பண்பி னுருவெனப் படுவது
விழிமாத் திரையாய்க் கவரப் படுங்குணம். 38

இதன் வகை

அதுவே,

வெண்மை கருமை பொன்மை செம்மை
பசுமை புகைமை சித்திர மென்னும்
பாகுபாட்டி னெழுவகைத் தாகி
நிலநீர் தீயி னிலைபெறு மன்னே. 39

### 2. சுவை

நாவாற் கவருங் குணஞ்சுவை யதுவே
இனித்தல் புளித்தல் கூர்த்தல் காழ்த்தல்
கைத்தல் துவர்த்தலென் றறுவகைத் தாகி
நிலநீர்க் கண்ணது நிலையுங் காலை. 40

### 3. நாற்றம்

மூக்கால் கவர்குண நாற்ற மதுதான்
நறியது மல்லது மெனவிரு வகைத்தாய்
நிலமாத் திரையி னிகழு மென்ப. 41

### 4. ஊறு

தோலென் றூனே கவர்குண மூறது
தட்பம் வெப்பம் அவற்றின் வேறென்
றம்மூ வகைத்தா யாயுங் காலை
நிலநீ ரனல்கால் நான்கினு நிலையும். 42

### 5. எண்

ஒருமை முதலிய வழக்கிற் கேது
ஒன்றுமுதற் பார்த்த விறுவா யெண்ணே. 43

### 6. அளவு

அளத்தல் வளக்கின் காரண மளவது
நுண்மை பெருமை நெடில் குறிலென்னும்
பாகுபாட்டி னால்வகைத் தாகும். 44

### 7. வேற்றுமை

வேறெனும் வழக்கிற் கேது வேற்றுமை. 45

### 8. புணர்ச்சி

புணர்தல் வழக்கிற் கேது புணர்ச்சி. 46

### 9. பிரிவு

புணர்ச்சிக் கழிவு செய்குணம் பிரிவே. 47

எண்ணுக் குணமுத லியம்பிய இவைதாம்
பண்முதற் பொருளொன் பதிற்றினு மருவும். 48

### 10. முன்மை, 11. பின்மை

முன்பின் னென்னும் வழக்கிற் கேது
முன்மை பின்மை யென்பமற் றவைதாம்
திசையிற் பொழுதி னிருவகை யுடைய. 49

திசை முன், பின்மை

சேய்மையி னணிமையிற் றிசைமுன் பின்னும். 50

கால முன், பின்மை

இளமை முதுமையிற் காலமுன் பின்னே. 51

### 12. திண்மை

முதற்படு வீழ்ச்சி துணைக்கா ரணமாய்
நிலம்புன லிரண்டி னிலைபெறுந் திண்மை. 52

### 13. நெகிழ்ச்சி

முதற்படு மொழுக்கிற் றுணைக்கா ரணமாய்
நிலம்புன லனலி னுறும்பிற நெகிழ்ச்சி. 53

# பஞ்சகீதம்

[திரு. சி. கதிர்வேலு முதலியார் எழுதியது]

(உரிமையுள்ளது)

## கடவுள் நிலை

கடவுள் நடுநிலையாக உள்ளவர். அவர் எல்லாவற்றையும் சமமாக நடத்துகிறவர். அவரை அறிவதற்குப் பரிசுத்தமான மனநிலையை அடையவேண்டும். பரிசுத்த மனமென்பது அகக்கண்ணாகும். அகக்கண்ணென்பது மும்மாயையை நீக்கின நிலையில் அமையும் தன்மை. செம்பில் களிம்பு கலந்ததுபோல ஜீவனில் மாயை கலந்திருக்கிறது.

மனக்கண்ணினால் மாயையைப் பார்க்காமல், ஜீவன் அறிவின் கண்ணினால் ஞானத்தைத் தன்னுள்ளேயே அறிய வேண்டும். மனக் கண் செம்பு; அறிவின் கண் தங்கம்; ஜீவன் இரும்பு. கடவுள் நடுநிலையில் நின்று தொண்ணூற்றாறு தத்துவங்களை நடத்துகிறார். ஆனால் அத்தத்துவங்களில் அவர் கலக்காமல் நிற்கிறார். அவர் (கடவுள்) மனிதன் தேகத்திலுள்ள இருதய கமலத்தில் ஒளிமயமாயும் சாக்ஷியாயும் இருந்துகொண்டு எல்லாவற்றையும் அறிந்துகொண்டு இருக்கிறாரென்று அறியவும் அவர் அரூபி. அவரை (அந்த ரூபத்தை) அறிவின் கண்ணினாலே ஜீவன் தன்னுள்ளேயே நன்றாகப் பார்க்கக்கூடும். குருவின் கருணையினால் மலமகற்றும் தீக்ஷையின் வழியால் தெளிவாக ஜீவன் அறியக்கூடும். குருவின் அனுக்கிரஹத்தினால் ஞானக்கண் திறக்கப்படும். அதனால் அகண்டஞானம் விளங்கும். கடவுள் சூக்ஷ்மம், தொண்ணூற்றாறு தத்துவங்களாகிய

தேகம் ஸ்தூலம். சூக்ஷ்மமாகிய கடவுளால் ஸ்தூலமாகிய தேகம் ஆடுகிறது.

தேகத்தையும் உலகத்தையும் மறப்பது அகக்கண்ணாகிய நெற்றிக்கண்ணென்று சொல்லப்படும். அது உள் பார்வை. இருட்டில் பொருள்கள் தெரிகிறதில்லை. அது அஞ்ஞானம். ஒளியில் அதாவது பிரகாசத்தில் பொருள்களை நன்றாகப் பார்க்கிறோம். அது ஞானம். ஒளிமயமாய் உள்ளவர் கடவுள்; இருள்மயமாயுள்ளது மாயை. இருட்டை நீக்க வெளிச்சம் வேண்டும்; மாயையை நீக்க ஞானம் வேண்டும்; மனக்கண்ணை நீக்க அறிவின்கண்ணாகிய நெற்றிக்கண் வேண்டும். நெற்றிக்கண்ணைக் காட்டுவது குருவாகும். கடவுளும் குருவும் ஒன்று; தவமும் ஞானமும் ஒன்று என்று அறியவும்.

பரிசுத்த மனதை அடைந்தால் ஞானமுண்டாகும். பரிசுத்த மனதினால் இருதய கமலம் பரிசுத்தமாகி அதன் வழியாய் ஞானம் தோன்றும். மனம் எப்படி அசைகிறதோ அப்படியே இருதய கமலமும் அசையும். ஆகையினாலே மனதைச் சுத்தமாக்கி இருதயத்தையும் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். இருதயமென்பது உள்ளம். அந்த உள்ளத்தில் கமலமாகிய இடத்தில் கடவுள் மனிதன் தேகத்திற்குள்ளே விளங்குகிறார். அவர் சிற்சபையில் நடனம் செய்கிறார் என்று குருவின் அனுக்கிரஹத்தினாலே தெரிந்துகொள்ளவேண்டும். குருவின் அருளால் பேரின்பத்தை அடையமுடியும்; இல்லாவிடில் முடியாது.

கடவுள் மாயையில் கலந்திராமல் அதற்கு வேறாகச் சாக்ஷியாய் இருக்கிறார். கடவுள் பரிசுத்தமானவர். அதுவே மாசில்லாப் பொருளாகும். அதன் முன்னிலையில் எல்லாத் தொழில்களும் நடைபெறும். குற்றமற்ற மனதையுடைய அன்பர் உள்ளத்தில் நன்றாகப் பிரகாசிக்கும். கடவு

ளின் கட்டளைகள் நீதியுள்ளன. அந்நீதியான நடையில் ஜீவன் நடக்கவேண்டும். அதனால் ஜீவன், ஜீவன்முக்த னாகிறான். ஜீவன் கீழ்ப்பாகத்திலுள்ளவன். கடவுள் மேல் பாகத்திலுள்ளவர். கீழ்ப்பாகத்திலுள்ள ஜீவன் மாயை யில் அகப்படாமல் மேல்பாகத்தில் பிரகாசிக்கின்ற நிர்க்குண முள்ள கடவுளிடத்தில் சேர்ந்தால் ஜீவனுக்கு முக்தி கிடைக்கும். ஒவ்வொரு எண்ணத்தையும் தொழிலையும் ஜீவன் செய்கிறதைக் கடவுள் அறிகிறார். அதற்குத் தக்க பலனையும் தருகிறாரென்று அறியவும்.

## தவநிலை

தவநிலை என்பது கடவுளின் நிலையேயாகும். அக் கடவுள் கல்லாலின் விருக்ஷத்தின் கீழே தக்ஷிணாமூர்த்தியின் கோலமாய்ச் சின்முத்திரையைப் பிடித்துத் தன் ரூபம் ஜீவ னுக்கு நன்றாகத் தெரியும்படியாகப் பிரகாசிக்கிறார், அவரே குருவாகும். குருவை அடைந்தால் தவநிலை கிட்டும். தக்ஷிணாமூர்த்தி கோலமாயுள்ள சின்மய குருவின் உப தேசத்தைப் பெற்றவுடன் ஜீவன் அக்குருவோடு சேர்ந்து அத்தவநிலையை அடைந்து மோக்ஷத்தை அடைகிறான். குருவாகிய கடவுளைத் தரிசிக்கிறதே தவமாகும். அத் தவத்தினால் ஞானயோகம் கைகூடும். யோகமென்பது ஜீவன் கடவுளோடு ஐக்கியப்படுவதாகும். ஐக்கியமென்பது ஜீவன் கடவுளாவதாகும் என்று அறிக. கடவுள் பிறவிப் பிணிக்கு மருந்தைச் செய்துமுடித்து வைத்திருக்கிறார். எந்த அன்பன் அவரைத் தரிசிக்கிறானோ அவன் வாயில் அம்மருந்தைக் கடவுளானவர் போடுகிறார். அதனால் அந்த ஜீவன் காயகற்பம் பெற்றுத் தங்க ரூபமாகி அவரோடு (அக்கடவுளோடு) கலந்து ஏகனாகிவிடுகிறான். அந்த ஒரே கற்ப மருந்தினால் ஜீவன் தவநிலையை அடைந்து யோக வாழ்வைப்பெற்று மோக்ஷ நிலையில் அமர்ந்துவிடுவான். கடவுளின் நிலையை ஜீவன் அடைகிறபோது அவனை சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய இவைகளை முடித் தவனாக ஆகிறான். பிறவிப் பிணியை அழிக்கும் மருந்தே

தவநிலையென்று சொல்லப்படும். தவநிலையைப் பெற கடவுளிடமிருக்கும் மருந்தை அன்பினால் ஜீவன் வாங்கி உட்கொண்டால் அந்த ஜீவனும் கடவுளும் ஐக்கியமாகிறார்கள். ஜீவன் தனது சூக்ஷ்ம சரீரத்தைத் தங்கமயமாக்க, கடவுள் மருந்தைப் பருகவேண்டும்.

கடவுள் மருந்தை உட்கொண்டவுடன் தவாக்கினி உண்டாகி அதனால் பிரகாசம் உண்டாகி ரேசக, பூரக, கும்பகமாகிய இவைகள் ஜீவனுக்கு இன்னதென்று தெரிய வரும். தவநிலையை ஜீவனறிகிறபோது அதனால் அந்த ஜீவனுக்குக் கற்பமருந்து கிடைத்து அதனால் கடவுளாக ஆகிறான்.

பொற்பங் கயத்தின் புதுநறவுஞ் சுத்தசலமும் புகல்கின்ற
வெற்பந் தராமா மதிமதுவும் விளங்கும் பசுவின் தீம்பாலும்
நற்பஞ் சகமு மொன்றாகக் கலந்து மரண நவைதீர்க்கும்
கற்பங் கொடுத்தாய் நின்றனக்குக் கைம்மாறேதுகொடுப்பேனே.

என்று இப்பாசுரத்திலும் காண்க.

தவநிலையில் அமர்ந்தால் எல்லா நன்மைகளையும் அடைந்தவனாகிறான். தவநிலையே கற்பமருந்தாகி நமது தேகத்தில் அதுவே அமுதநாடிகளைத் தட்டி, அமுதமளித்து இனிப்பைக் கொடுத்து, ஆனந்தத்தை உண்டாக்கும். தவம் முடிந்ததற்கு அடையாளம் ஆனந்தம் உண்டாகுவதேயாகும். ஆனந்தம் உண்டானால் தவம் முடிந்ததென்று அறியவேண்டும்.

கனிகள் உண்டான மரத்தின்மீது ஏறினவன் நிச்சயமாய் அம்மரத்தின் பழத்தைத் தொடுவதுபோல, ஆனந்தமாகிய கனியை வைத்திருக்கும் சின்மய குருவாகிய கடவுளிடத்தில் ஜீவன் சேர்ந்தால ஆனந்தமாகிய அமிர்தத்தைப் பெற்றவனாகிறான்.

## பஞ்சாக்ஷரப் பொருள்

மனத்தினால் கடவுளைக் காண்பதற்கு ஜீவன் பஞ்சாக்ஷரப் பொருளைப் பெறவேண்டும்; கடவுள் நிலைக்கும் ஜீவன் நிலைக்கும் மத்தியில் மாயை யிருக்கிறது; பஞ்சாக்ஷரத்தின்

வழியாய் - நடுவிலுள்ள மாயையாகிய திரையை நீக்கிக் கடவுளின் சந்நிதானத்திற்குப் போவதற்கு ஏதுவாயிருக்கிறது.

கடவுள் தன்னை அடைவதற்குத் 'தனக்கு முன்னே பஞ்சாக்ஷரப் பொருளை அமைத்து அப்பொருளை எந்த அன்பன் தொடுகிறானோ அவனுக்குக் கருணை புரிகிறேன்' என்று சொல்லுகிறது போல அந்தக் கடவுள் பஞ்சாக்ஷரப் பொருளை ஏற்படுத்தியிருக்கிறார். பஞ்சாக்ஷரப் பொருளைக் குருவின் அருளால் பெற்றால் சின்மயக் கடவுளின் சன்னிதானம் தோன்றும். அங்கே கடவுளை வணங்கலாம். கடவுளின் வணக்கமே பஞ்சாக்ஷரமாகும். கடவுள் பஞ்சபூதங்களில் கலந்துமிருக்கிறார்; அவைகளினின்று தனித்தும் நிற்கிறார். பஞ்சாக்ஷரப் பொருளினாலே கடவுள் நிலையை அடையமுடியும். அந்தப் பஞ்சாக்ஷரப் பொருளே மாயையை நீக்கிக் குருசந்நிதானத்திற்குப் போக ஒரு மார்க்கமாகும். கடவுளிடத்திலிருந்து ஐந்து கலைகள் பிரிந்தன. அவைகள் தான் பஞ்சாக்ஷரம்.

பஞ்சாக்ஷர தியானத்தினால் (வாயினால் உச்சரிப்பதல்ல; மனதினால் எழுத்தை நினைப்பதுமல்ல; ஆனால் நேராய்ப் பொருளையே அறிவதாகும்) ஜீவன் மாயையினின்று விடுபட்டுப் பதியென்னுமிடத்திற்குப் போய் அமர்வான். மனக்குற்றங்களை நீக்கிப் பதிகுணமானால் பஞ்சாக்ஷர ஜெபம் அதுவேயாகும். மாயையை நீக்குவதற்குப் பஞ்சாக்ஷரப் பொருள் ஏற்பட்டிருக்கிறது. அதைக் குருவின் அனுக்கிரஹத்தினாலே அறிந்தாலன்றி தெரியவராது. ந-ம = என்பது மாயை, சி என்பது சிவம், வ என்பது சத்தி, சிவசத்தி யென்பது பிந்துவும் நாதமுமாகும். ய என்பது பரம ஆன்மாவாம் என்பதாம். மாயையை நீக்கிச் சிவசக்தி கலையை யிழுத்து ஜீவன் ஆன்மாவோடு ஐக்கியப்படுவதாகும். ஆகையினாலே சிவயநமவென்பதை சூக்ஷ்மபஞ்சாக்ஷரமென்று ஜீவன்முக்தர்கள் சொல்லுகிறார்கள். இப்படியாகவே பாசத்தை நீக்கி ஜீவன் ஆன்மாவோடு ஐக்கியப் படுவதே பஞ்சாக்ஷரத்தின் பொருளாகும்.

## குருபாதம்

குருபாதம் என்பது கடவுளுடைய பாதமாகும். கடவுளுடைய இரண்டு கலைகளை இரண்டு பாதங்களாகக் குறிக்கப்படுகிறது. அந்த இரண்டு பாதங்களால் நிர்த்தனஞ்செய்து அண்டசராசர முழுமையும் பிரகாசிக்கிறார். அவருடைய நிர்த்தனமே பாதமாகும். இரண்டு பாதங்களைக் கொண்டு அவர் சித் வெளியில் நடனம் செய்கிறார். இந்த இரண்டு பாதங்களை அன்பின் வழியாய்த் தொழுது கடவுளைக் காண வேண்டும்.

கடவுள் மாயையை அவருடைய இரண்டு பாதங்களினால் அழித்துக்கொண்டிருக்கிறார். எந்த அன்பன் அவரைத் தொழுகிறானோ அவன் அவரோடு கலந்து ஏகனாகி மாயையை விலக்குகிறான் என்று அறியவும். இதன் உண்மையை இப் பாடலில் காண்க :

" ஒருபாதந் தன்னைத்தூக்கி யொருபாதந் தன்னைமாற்றி
இருபாத மாடுகின்ற வியல்பைநீ யறிந்தாயானால்
குருபாத மென்றுகூறுங் குறிப்புனக் குள்ளேயாச்சு
வருபாத னைகைநாதர் மலரடி காண்பாய் நெஞ்சே ".

## ஞானம்

குருவை அடைந்து அவரால் ஒரு மொழியைப் பெற்று அதனால் ஞான யோகத்தை அடைந்து ஆனந்தத்தை அனுபவிக்கிறநிலை எதுவோ அது ஞானமாகும். யோகத்தின் முடிவு ஞானம். ஜீவன் பிரம்மத்தோடு ஐக்கியமாகிவிடுகிறதே ஞானம். மறுபிறப்பற்றது ஞானம்.

அன்னமயத்தையும் பிராணமயத்தையும் தள்ளி மனோமயத்தை விஞ்ஞானமயத்தில் சேர்த்து அதன் வழியாய் ஆனந்தமயத்தில் லயிக்கவேண்டும். இதுவே கடவுள் வணக்கம். தங்கம் குற்றமில்லாமல் இருக்கிறதுபோல மாயை யில்லாமலிருக்கிறது ஞானம். ஞானமும் யோகமும் ஒன்றாயிருக்கிறதினால் இதையே ஞானயோக மென்றும், சிவராஜயோகமென்றும் சொல்லப்படும். யோகத்தினாலே ஞானத்தைப் பெறுகிறதினால் ஞானயோகமென்று பெயர்

வந்தது. பசுகரணம் அற்றுப் பதிகரணம் வரல்வேண்டும்; ஜீவன் பாசத்தை உண்மையிலேயே நீக்கிப் பதிகரணமாக ஆவதே சுத்தஞானம். ஞானமென்பது பதி அறிவு. அஞ்ஞானமென்பது பாச அறிவென்பதாம்.

குரு காட்டுவது பதி அறிவு. சீடன் தள்ளுவது பாச அறிவு. பதியாகிய கடவுள் ஞானப் பொருளென்று சொல்லப்படும். கடவுள் பதி ஞானம் ஆகிய இவை மூன்றும் ஒருபொருட் சொற்களாம்.

ஆகையாலே இவற்றை நன்கு அறிந்து இதிலுள்ள அமுதத்தைத் தெரிந்தெடுத்து அநுபவிக்கவேண்டுமென்பதற்காகவே இப்பொருள்கள் கூறப்பட்டுள்ளனவென்று அறிக.

# சைவப் புலவர் தேர்வு—1939

## சைவ இலக்கியப் பகுதி

காலம்—**3** மணி] [அமிசம்—**100**

I (1) சுந்தரர் பாடிய திருப்புன்கூர்த் தேவாரத்தில் அத்தலத்தைப்பற்றிக் கூறியிருக்கும் வரலாறு என்ன?

(2) "......இவர்கள் குற்றஞ் செயினுங் குணமெனக் கருதுங் கொள்கை கண்டு, நின்குரை கழலடைந்தேன்"—எவர்கள்? என்னகுற்றஞ் செய்தார்கள்?

(3) "ஊனிலுயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி நன்புலத்
தேனைவழி திறந்தேத்து வார்க்கிட
ரானகெடுப் பனவஞ் செழுத்துமே"

—பதவுரை வரைக.

(4) சம்பந்தர் 'திருவெழுகூற்றிருக்கை' பாடியதன் வரலாறு என்ன?

II (1) மாணிக்கவாசகர்காலம் மூவர் முதலிகட்கு முன்போ? பின்போ? நுங் கொள்கையை ஆதாரங் காட்டி நிறுவுக.

(2) “ பவன் எம்பிரான் பனிமாமதிக் கண்ணி
விண்ணோர் பெருமான்
சிவன் எம்பிரான் என்னையாண்டு கொண்டான்
என்சிறுமை கண்டும்
அவன் எம்பிரான் என்னநான் அடியேன்
என்ன இப் பரிசே
புவன் எம்பிரான் தெரியும் பரிசா
வதியம் புகவே ”

உரை நடையும், பொழிப்புரையும் வரைக.

(3) திருச்சதகத்தில் ‘அறிவுறுத்தல்’ என்ற பகுதிக்கு அப்பெயர் பொருந்துமா? காரணங் காட்டி விளக்குக.

(4) எட்டிஞேடிரண்டு, இரண்டிலி, கோகழி—குறிப்பு வரைக.

(5) “ தளியனேன் பெரும்பிறவிப் பௌவத்து ” என்ற தொடக்கத்த பாசுரத்தில் வரும் உவமான உவமேயங்களைக் கூறுக.

III (1) அப்பர் சம்பந்தர் இவர்கள் முதன்முதல் கூடிய இடம், உடனுறைந்த இடம், பிரிந்த இடம், பின்பு கூடிய இடம் இவைகளை முறையே எழுதுக.

(2) அப்பரும் சம்பந்தரும் சீகாழிக் கோயிலுக்குப் போவதைச் சேக்கிழார் எவ்வாறு வர்ணிக்கிறார்?

(3) திருத்தூங்கானைமாடம், திருநல்லூர், திருவீழிமிழலை, திருப்பழையாறை வடதளி இவைகளில் அப்பர் சம்பந்தமாக நிகழ்ந்த அருட்செயல்கள் எவை? அவற்றிற்கு அவர் தேவாரத்தில் அகச் சான்றுகள் கூறுக.

(4) திருநாவுக்கரசர் புராணத்தில் சேக்கிழார் சமணரைப் பற்றிக் கூறும் குறிப்புகளைச் சுருக்கி எழுதுக.

IV (1) திருவள்ளுவரைச் சைவர் என்போர் கூற்றுக்கு ஆதாரங்கள் என்ன?

(2) “ நாம் உலகில் நாளும் காணும் நிகழ்ச்சிகளினின்றும் உவமைகளை எடுத்துக் கையாளுவதில் இணையற்றவர் திருவள்ளுவர் ”—இக்கூற்றுக்கு மேற்

கோள்களாக அறத்துப்பாலினின்றும் சில உவமைகள் தருக.

(3) "புதல்வரைப் பெறுதல்" என்ற அதிகாரத்தின் தலைப்பிற்கு அப்பெயர் பொருந்துமா? ஆராய்க.

(4) "ஆரா வியற்கை யவாநீப் பினந்நிலையே
பேரா வியற்கை தரும்"

—பரிமேலழகர் உரையும் விசேடவுரையும் வரைக.

V (1) சைவ சமயநெறி என்ற நூலில் மூன்றிலக்கணங்களின் முறை வைப்புக்குக் காரணங் காட்டுக.

(2) 'ஆகமம்' என்பதன் பொருளை விளக்குக.

(3) "தேசிகர்க்குச் சின்னமைந்து" —எவை?

(4) "பாரேல் கட்டநாய் நீசர்கரம்"

—எப்போதும் பாரேல்? கோடிட்ட பதங்கட்குப் பொருள் எழுதுக.

(5) திருநீறு அணியும் தானங்கள், பரிமாணம், முறைமை இவைகளைச் சுருக்கி வரைக.

---

## சைவ சாத்திரப் பகுதி

காலம்—**3** மணி] [மதிப்பு—**100**

1. சுத்தமாயை அசுத்தமாயை என்பவற்றின் இயல்பு, தொழில், வியாபக வியாப்பியம் முதலியனபற்றிச் சிவஞானபாடியம் கூறுவதைச் சுருக்கமாக எழுதுக.

2. ஐந்தொழில்களுள் மறைப்பு என்ற திரோபாவத்தின் தன்மையைப் பாடியம் எவ்வாறு விவரிக்கின்றது?

3. நிவிர்த்திகலை முதலிய ஐந்து கலைகளைப்பற்றிச் சிவஞான பாடியம் கூறுவதைச் சுருக்கமாக எழுதுக.

4. சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி யென்ற மூன்றவத்தைகளுள் ஒவ்வொன்றிலும் தொழிற்படும் தத்துவங்கள் யாவை? தொழிலற்றிருப்பன எவை?

5. சிவோகம் பாவனையைப் பற்றிய பிழைபட்ட கருத்துக்கள் யாவை? அவற்றை எவ்வாறு மறுத்துச் சிவஞான முனிவர் உண்மையை விளக்குகிறார்?

6. பசுபுண்ணியம் பதிபுண்ணியம் என்ற பாகுபாட்டின் அடிப்படை யாது? இவற்றின் உட்பிரிவுகள் யாவை?

7. மூவகை ஆன்மாக்கட்கும் கடவுள் மெய்ஞ்ஞானத்தைத் தருளும் வகையை விவரிக்க. சில ஆன்மாக்களுக்கு மெய்ஞ்ஞானம் தானே விளையும் என்பதன் உண்மைப்பொருள் யாது?
8. காணுமுபகாரம் காட்டுமுபகாரம் என்ற இரண்டினையும் கடவுள் செய்யும் வகையைத் தெளிவாக விளக்குக.
9. சில பக்குவிகளின் பிராரத்த கன்மத்தைக் கடவுளே அநுபவிக்கிறார் என்பதன் தாற்பரியம் யாது?
10. அஷ்டவித்யேசுவரர் பெயர்களை எழுதி அவர்களைப் பற்றிய விவரங்களை (இயல்பு, பக்குவம், தொழில், அதிகாரம், புவனம்) சுருக்கமாக எழுதுக.
11. பதி முதற்காரணரல்லர் நிமித்தகாரணர் என்பதைத் தத்துவ சங்கிரகம் எவ்வாறு நிலைநாட்டுகின்றது?

# இளஞ்சைவப் புலவர் தேர்வு—1939

## சைவ இலக்கியப் பகுதி

[காலம்—$2\frac{1}{2}$ மணி [அமிசம்—100

I (1) மூவர் ஆதியில் ஓதிய தேவாரப் பதிகங்கள் எத்தனை? இப்போதுள்ளவை எத்தனை?

(2) இறைவன் ஆன்மாக்கட்காக இயற்றும் ஐந்தொழில்கள் எவை? இவை, "தோடுடைய செவி" என்ற தொடக்கத்த பாசுரத்தில் குறிக்கப்பட்டிருத்தலை விளக்குக.

(3) "இராவணன் மேலதுநீறு வெண்ணத் தகுவதுநீறு
பராவண மாவதுநீறு பாவமறுப் பதுநீறு
தராவண மாவதுநீறு தத்துவ மாவதுநீறு
அராவணங்குந் திருமேனி யாலவாயான் திருநீறே"
—பதவுரை வரைக.

(4) இருவளி, முந்நீர், நான்மறை, ஐந்துகல்வி, ஆறுபதம்
—குறிப்பு வரைக.

II (1) மாணிக்கவாசகர் பிறப்பிடம், காலம், சமயம், தாய் தந்தையர் பெயர் முதலியவைகளை எழுதுக.

(2) நீத்தல் விண்ணப்பத்தில் வரும் பழமொழிகள் மூன்று கூறுக.

(3) விளரி, தாறு, அழனி, முயற்கறை, திதலை—பொருள் வரைக.

(4) "குறுகுதப் பின்றிநின் றென்குறிப்பே
செய்துநின் குறிப்பில்
விதுவிதுப்பேனை விடுதிகண்டாய்"
—பொழிப்புரை வரைக.

III (1) கீழ் வருவனவற்றிற்குச் சந்தர்ப்பம் கூறுக :—

(அ) "மானுடம் இவர்தாம் அல்லர்"

(ஆ) "நற்கணத்தில் ஒன்றானேன் நான்"

(இ) "எம்பெருமானோறெற்பின்யாக்கை அன்பென்னே!"

(2) புராணத்திலுள்ளவற்றைக் கொண்டு புனிதவதியாரின் குணநிசயத்தைப்பற்றிச் சுருக்கமாக வரைக.

IV (1) பெரியபுராணத்தில் சுந்தரர் வரலாற்றை முதலிலும், அவர் தந்தை தாயர் வரலாறுகளை இறுதியிலும் வைத்திருத்தற்குக் காரணங்கள் உளவோ? கூறுக.

(2) ஞானசம்பந்தர் காலத்திருந்த நாயன்மார்கள் யார்? அவர்கள் எவ்வெக்குலத்தைச் சார்ந்தவர்கள்?

(3) நேசநாயனார், செருத்துணை நாயனார், சிறப்புலி நாயனார், முருகநாயனார் இவர்களுள் இருவரைப் பற்றிச் சுருக்கி வரைக. அவர்கள் வரலாறு பெரியபுராணத்தில் எவ்வெச்சருக்கத்திலுள்ளது?

V (1) "இருள்சேர் இருவினையும் சேரா"
—விசேடவுரை எழுதுக.

(2) "சிவிகை பொறுத்தானோ டூர்ந்தானிடை"
—இது எதை உவமிக்க வந்தது?

(3) "நான்கும் இழுக்கா இயன்றது அறம்"
—எந்த நான்கும்?

(4) "அன்புடையார் என்புமுரியர் பிறர்க்கு"
—இதற்குப் பரிமேலழகர் எடுத்துக்காட்டாகக் கூறும் வரலாறுகள் எவை?

(5) பொய்யும் மெய்யாகும்—எப்பொழுது?

VI (1) பூசனைக்காகாத பூக்கள் எவை?

(2) மீதாரி என்றால் என்ன?

(3) எவ்வெப்பூக்களை எவ்வெவ்வளவு காலம் வைத்துச் சாத்தலாம் ?

(4) இல்வாழ்வான் பல் துலக்கவேண்டிய கருவிகள் எவை ?

---

## சைவ சாத்திரப் பகுதி

காலம்—2½ மணி] [மதிப்பு—100

1. அருவினில் உருவந்தோன்றி அங்காங்கி பாவமாகி
உருவினில் உருவமாயே உதித்திடும் உலகமெல்லாம்
பெருகிடும் சுருங்கும் பேதாபேதமோ டபேதமாகும்
ஒருவனே யெல்லாமாகி அல்லவா யுடனுமாவன்.

—இப்பாட்டிற் கூறப்படும் உண்மைகளைத் தெளிவாக விளக்குக.

2. யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார் தாம் வருவர்—ஏன் ? எவ்வாறு ? விளக்குக.

3. ஆன்மாவின் வடிவுதானே அநேகார்த்தக் கூட்டம் என்ற கொள்கையைத் தகுந்த காரணங் காட்டி மறுக்க.

4. தன்னறிவதனாற் காணும் தகைமையன் அல்லன் ஈசன். இக் கொள்கையை மூன்று காரணங் காட்டி நிலைநாட்டுக.

5. நான் பிரமமென்னு ஞானம் கருதி பசுஞானம். இதைத் தெளிவாக விவரிக்க.

6. ஆணவந்தான் அநாதி அந்தமடையாதாகும். இக்கொள்கையைப் பரிசீலனை செய்க.

7. வேட்டுவனும் அப்புழுப்போல் வேண்டுருவைத்தான் கொடுத்துக் கூட்டானே மண்போற் குளிர்ந்து—இவ்வுவமைகள் தெரிவிக்கும் உண்மைகளைத் தெளிவுபடுத்துக.

8. கீழ் வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி விவரிக்க :—ஆலோகத்தின் அபாவமே இருள் ; புத்தி தத்துவ உலகத்தின் முத்தி ; குண தத்துவ உலகத்தின் முத்தி ; பூதங்களின் அபாவமே ஆகாயம்.